# தந்தாய் உன் சந்நிதியில்

தந்தாய் உன் சந்நிதியில்
தாழ்பணிய வேண்டும்
தனி வரங்கள் கனிவோடு நீ
வழங்க வேண்டும்

**1**
என்னுயிரை இழந்தாலும் எல்லோர்க்கும் நன்மைகள்
எல்லோரும் செய்கின்ற தியாக மனம் வேண்டும்
உன் மக்கள் ஒன்றாக இணைந்திருக்க வேண்டும்
உரிமைகள் பெறுகின்ற உலகிங்கு வேண்டும்

**2**
இது போதும் என்கின்ற நிலை மாறி உலகில்
இது தேவை என எண்ணி உருகிடவும் வேண்டும்
அது போக எழுகின்ற இன்பங்கள் எல்லாம்
அயராமல் எதிர்கொள்ளும் மன உறுதி வேண்டும்

**3**
எல்லோரும் எல்லாமே பெற வேண்டும் என்ற
உயர் எண்ணம் உள்ளத்தில் உருவாக வேண்டும்
வல்லோரின் ஆணவத்தை நிலைகுலையச் செய்யும்
பெரியோர்கள் நலம் வாழ வரம் ஒன்று வேண்டும்